செ.வெ.எண்:49 நாள்:22.6.2017

# பத்திரிக்கைச் செய்தி

பொது விநியோகத்திட்டத்தின் கீழ் நியாய விலைக்கடைகள் மூலம் வழங்கப்படும் அத்தியாவசியப் பொருட்களை பெறுவதற்காக பயன்படுத்தப்படும் குடும்ப அட்டைகளை மாற்றி மின்னணு குடும்ப அட்டைகளாக அச்சிட்டு வழங்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது.

தூத்துக்குடி மாவட்டத்தில் ஏற்கனவே பெறப்பட்ட மின்னணு குடும்ப அட்டை தொலைந்து போயிருந்தாலோ அல்லது சேதமடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் இருந்தாலோ பழைய குடும்ப அட்டையில் பதிவு செய்துள்ள செல்போன் எண்ணை இ-சேவை மையத்தில் தெரிவிக்க வேண்டும். அந்த எண்ணுக்கு ஒரு முறை பயன்படுத்தக்கூடிய கடவுச்சொல்(ஓ.டி.பி. எண்) அனுப்பப்படும். அந்த கடவுச் சொல்லை பயன்படுத்தி புதிய மின்னணு குடும்ப அட்டையை ரூ.30/- செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

மேலும் பெறப்பட்டுள்ள புதிய மின்னணு குடும்ப அட்டைகளில் குடும்ப உறுப்பினர்களின் பெயர்களை நீக்குதல், குடும்ப அட்டையின் வகையை மாற்றம் செய்தல், சிலிண்டர்களின் விவரத்தினை மாற்றம் செய்தல், குடும்ப தலைவர் பெயரை மாற்றம் செய்தல், முகவரி மாற்றம் செய்தல் ஆகிய சேவைகளும் இ-சேவை மையங்களில் தற்போது நடைபெற்று வருகிறது. அவ்விண்ணப்பங்களுக்கு வட்ட வழங்கல் அலுவலர் ஒப்புதல் அளித்தபிறகு விண்ணப்பதாரரின் செல்போன் எண்ணிற்கு குறுஞ்செய்தி அனுப்பப்படும்.

குறுஞ்செய்தி கிடைக்கப்பெற்றவுடன் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தால் நிர்வகிக்கப்படும் இ-சேவை மையங்களில் ரூ.30/- கட்டணம் செலுத்தி திருத்தப்பட்ட மின்னணு குடும்ப அட்டையை பெற்றுக் கொள்ளலாம் என்றும் தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.